# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.161/2021</u>

PW2- ஏழுமலை நாள். 03.04.2025

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தன்று நாவலூரிலிருந்து எசனை நோக்கி வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் நாவலூரிலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டேன். நான் விபத்து நடந்ததை கண்ணால் பார்த்தேன். சாலையில் இடதுபுறமாக தான் வந்தேன். இறந்தவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார். சம்பவம் நடந்த இடத்தில் கிழக்குபுறமாக பெரிய ஏரி உள்ளது என்றால் சரிதான். விபத்து சாலையின் வடபுறம் நடந்தது. எதிரில் வந்து விபத்தை ஏற்படுத்தியவர்களும் விபத்து நடந்தவுடன் இறந்தவர் பக்கத்திலேயே விழுந்து கிடந்தார்கள். இறந்தவர் வாகனத்தில்தான் மூன்று பேர் வந்த வாகனம் மோதியது. இறந்துபோனவர் வந்த வாகனத்தின் முன்புறத்தில்தான் மோதியது. சம்பவம் நடந்தபோது என்னை தவிர வேறு ஆள்நடமாட்டம் இல்லை. நான் சம்பவ இடத்தில் சுமார் 1/2 மணி நேரம்இருந்தேன். அந்த நேரத்திற்குள்ளாக இறந்துபோனவரின் மனைவி, வந்திருந்தார். இன்னும் 2, 3 பேர் வந்தார்கள். இறந்தவரின் மனைவிதான் 108 ஆம்புலனஸ்க்கு தகவல் சொன்னார். நான் விபத்தில் அடிப்பட்டவருக்கும், இறந்தவருக்கும் எந்த உதவியும் செய்யவில்லை. நான் யாருக்கும் விபத்து பற்றி தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றும், உண்மையிலேயே விபத்து ஏரி உள்ள பக்கத்தில் தான் நடந்தது என்றும், எதிர்மனுதாரர் சென்றுகொண்டிருந்த வாகனத்தில் இறந்துபோன நபர் தான் தவறாக வந்த வாகனத்தில் நடுப்புறத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் அங்கு இருந்த 1/2 மணி நேரத்தில் காவல்துறையினர் ஜீப்பில் வந்தார்கள்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.